# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2012

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 8

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. பைந்தமிழ் என்ற சொல் குறிப்பது

அ) இளமைத்தமிழ் ஆ) இனியதமிழ்

இ) முதுமைத்தமிழ் ஈ) செம்மையானதமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. குண்டலகேசி எனும் காப்பியத்தை எழுதியவர்

அ) இளங்கோவடிகள் ஆ) திருத்தக்கதேவர்

இ) நாதகுத்தனார் ஈ) சீர்த்தலைச் சாத்தனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. இலையின் காய்ந்த பருவத்தினைக் குறிக்கும் பெயர்

அ) தளிர் ஆ) கொழுந்து

இ) இலை ஈ) சருகு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) வெள்ளிவிழா ஆ) வைரவிழா

இ) பொன்விழா ஈ) பவளவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பார் என்ற சொல் குறிக்கும் பொருள்

அ) உலகம் ஆ) வானம்

இ) மலை ஈ) காற்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. விழுப்புண் எனப்படுவது ................................ ஏற்படும் புண்.

அ) விளையாட்டின் போது ஆ) ஓடும்போது

இ) போரின்போது ஈ) நடக்கும் போது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. பண்டாரவன்னியனின் நினைவுக்கல் உள்ள இடம்

அ) கற்சிலைமடு ஆ) சின்னமடு இ) இரணைமடு ஈ) ஊரெழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. உலகத்தார் உள்ளமெல்லாம் நிறைந்திருப்பவர்

அ) பணமுள்ளவர் ஆ) அறிவுள்ளவர்

இ) உண்மைபேசுபவர் ஈ) காட்டிக்கொடுப்பவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. எனது பள்ளி திருக்குறள் போட்டியில் முதலிடம்பெற்றது. இதில் வந்துள்ள ஆகுபெயர்

அ) பொருள் ஆ) இடம் இ) சினை ஈ) குணம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. தகடூரை ஆண்ட தமிழ் மன்னன்.

அ) சேரன் ஆ) அதியர்மான்

இ) பாண்டியன் ஈ) எல்லாளன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. "ஆணும் பெண்ணும் நிகர் எனக் கொள்வதனால் அறிவில் ஓங்கி இவ் வையகம் தழைக்கும்" எனக் கூறியவர்.

அ) பாரதியார் ஆ) ஔவையார்

இ) வள்ளுவர் ஈ) பாவேந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. "இந் நெல்லிக்கனியை உண்டால் நீண்டகாலம் வாழ்வர்" என்று அதியர்மானுக்குக் கூறியவர்

அ) ஔவையார் ஆ) துறவி இ) அமைச்சர் ஈ) வேடன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. 'கீரியும் பாம்பும் போல' என்ற உவமைத்தொடர் விளக்குவது

அ) ஒற்றுமையை ஆ) பகையை

இ) நட்பை ஈ) அன்பை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. ஆசுகவி பாடுவதில் வல்லவர்

அ) நக்கீரர் ஆ) கம்பர்

இ) இளங்கோ ஈ) காளமேகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. மா + சோலை என்பதைப் புணர்த்தினால் வருவது

அ) மாசோலை ஆ) மாங்சோலை

இ) மாஞ்சோலை ஈ) மாச்சோலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. காட்டுமல்லிகை என்ற பாடலை எழுதியவர்

அ) உருத்திரமூர்த்தி ஆ) சோமசுந்தரப்புலவர்

இ) கல்லடிவேலன் ஈ) காளமேகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. நான் செருமனியில் வசிக்கிறேன். இதில் வந்துள்ள வேற்றுமை

அ) முதலாம் ஆ) நான்காம் இ) ஏழாம் ஈ) ஐந்தாம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. பின்வருவனவற்றுள் கிறித்தவ நெறியைச் சார்ந்த இலக்கியம்

அ) சீறாப்புராணம் ஆ) இரட்சணிய யாத்திரீகம்

இ) திருவாசகம் ஈ) திருவருட்பா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. தமிழ்மக்களின் நாகரிக உயர்வில் உருவான திருநாள்

அ) கலைவிழா ஆ) தைப்பொங்கல் இ) ஆடிப்பிறப்பு ஈ) வாணிவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. சந்திரனைக் கண்டு மாலையில் மலரும் பூ

அ) மல்லிகை ஆ) தாமரை இ) அல்லி ஈ) முல்லை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. 'திருக்குடந்தைக் கோட்டானே' என்ற பாடல் வரியில் கோட்டான் என்ற சொல் குறிப்பது

அ) ஆந்தையை ஆ) புறாவை இ) தும்பியை ஈ) குயிலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. பின்வருவனவற்றுள் இணைமொழி

அ) கடகட ஆ) கன்னங்கரிய இ) கூடிக்குலாவி ஈ) சின்னச்சின்ன

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. பழமொழி:- தாயும் பிள்ளையும் ஆனாலும் .................. வயிறும் வேறு.

அ) வாயும் ஆ) காதும் இ) மூக்கும் ஈ) காலும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. 'ஊரான ஊர் இழந்தேன்' எனத்தொடங்கும் பாடல் உணர்த்துவது

அ) நிமிர்வு ஆ) கனிவு இ) கழிவிரக்கம் ஈ) போற்றுதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. இலங்கையை ஆண்ட கடைசிச் சோழமன்னன்

அ) இராசேந்திரன் ஆ) குலோத்துங்கன் இ) மாகன் ஈ) இராசராசசோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. சேவல் கூவும். அதுபோல ஆந்தை

அ) கீச்சிடும் ஆ) கத்தும் இ) கூவும் ஈ) அலறும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. ஈழத்து ஆசுகவி எனப் புகழப்படுபவர்

அ) சின்னத்தம்பிப் புலவர் ஆ) சோமசுந்தரப் புலவர்
இ) கல்லடிவேலன் ஈ) தேசிகவிநாயகம்பிள்ளை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. 'தமிழ்த்தேன்' என்பது

அ) உவமை அணி ஆ) உருவக அணி இ) சிலேடை அணி ஈ) எதுகை அணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. நகுதற் பொருட்டன்று நட்பு. நகுதல் என்றால்

அ) சிரித்தல் ஆ) அழுதல் இ) மகிழ்தல் ஈ) வெறுத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. பெங்கூற்றர் கோட்டையைக் கட்டியவர்கள்

அ) ஒல்லாந்தர் ஆ) போர்த்துக்கேயர் இ) ஆங்கிலேயர் ஈ) அமெரிக்கர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

அன்று அந்தக் கடைசி நாள். அனைத்து நம்பிக்கைகளையும் இழந்த நாள். தன்னை மறந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் துடிக்கின்ற உயிர்த்துடிப்பு. ஒரு சிறிய நிலப்பகுதி. இந்நிலப் பகுதிக்குள் நெருங்கிக்க கிடக்கும் பல இலக்கம் (இலட்சம்) மக்கள். நாற்புறமும் வான வேடிக்கைகள் போல் துப்பாக்கி வேட்டுக்கள். பாய்ந்த அத்தனை குண்டுகளிலும் தீயின் சிதறல்கள். எதிர்ப்போர் இல்லாமலே படையினர் மக்கள் மீது போர் தொடுத்துக் கொண்டிருக்கின்றனர் . படைவீரர் தம் வன்கொடும் உணர்வுகளை அப்பாவி மக்கள் மீது தீர்க்கின்றனர் . இறந்து கிடக்கும் ஒரு தாயின் மடியில் நான்கு அகவைக் குழந்தை. அது அம்மா! அம்மா! என்று கதறுகின்றது. நெஞ்சம் வலிக்கின்றது. அக்குழந்தைக்கு யாராலும் உதவ முடியவில்லை. உயிர் தப்ப ஓடுகின்றனர் . எங்கும் மரண ஓலம். நானும் உயிர் தப்ப ஓடுகின்றேன். வழியில் என் அம்மா காயம் பட்டுத் துடித்துக்கொண்டிருந்தார் . அம்மா! என்று கத்தியபடி அருகே போன எனக்கு அம்மா கூறினார் "நான் இனித் தப்ப மாட்டேன். நீயாவது ஓடு, உயிர் தப்பு என்றோ ஒருநாள் எதிரிகளைப் பழிவாங்கு". ஒரு கணம் சிந்தித்தேன். ஓடத் தொடங்கினேன். என் உயிருக்காக அல்ல. என் நாட்டின் விடிவுக்காக.

1. வானவேடிக்கை போல் காணப்பட்டவை எவை?

______________________________________________

______________________________________________

2. குழந்தை எங்கிருந்து அழுதுகொண்டிருந்தது?

______________________________________________

______________________________________________

3. காயம்பட்டுத் துடித்துக்கொண்டிருந்தவர் யார் ?

______________________________________________

______________________________________________

4. இவன் ஏன் ஓடுகின்றான்?

______________________________________________

______________________________________________

5. மாந்தநேயமற்ற இக்கொடிய போர் எங்கே நடைபெற்றது?

______________________________________________

______________________________________________

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினாக்கள் ஏழில் - ஐந்திற்கு விடை தருக.

1. உள்ளத் தூய்மை எதனால் ஏற்படும் என வள்ளுவர் கூறுகின்றார் ?

2. 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' இப்பழமொழி குறிப்பது என்ன?

3. சைவநெறி சார்ந்த இலக்கியம் ஒன்றினதும் கிறித்தவ நெறிசார்ந்த இலக்கியம் ஒன்றினதும் பெயரைத் தருக.

4. பண்டாரவன்னியனுடன் தொடர்புடைய ஊர்கள் இரண்டின் பெயர்கள் தருக.

5. 'உலக மக்கள் யாவரும் உறவினரே' என்ற கருத்தைக் கூறும் பாடல் வரியைத் தருக.

6. தன் இனத்தின் விடிவுக்காக உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தமிழீழத் தாய் யார் ?

7. நானிலங்களின் பெயர்களைத் தருக.

(புள்ளிகள் 10)

## 4) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

நாமே நமக்குத் துணையானால்
நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடிவரும்
சற்றும் இதற்கோர் ஐயமுண்டோ?

நெஞ்சில் இரக்கம் நிறைந்தவர்க்கு
நேயம் கொண்ட நெறியோர் க்கு
விஞ்சும் பொறுமை உடையவர்க்கு
வெல்லும் படைகள் வேறுளவோ?

உள்ளந் தேறிச் செய்வினையில்
ஊக்கம் பெருக உழைப்போமேல்
பள்ளம் உயர் மேடு ஆகாதோ?
பாறை பொடியாய்ப் போகாதோ?

1. நாம் எப்படி உழைக்கவேண்டும் என்று கூறப்படுகின்றது?

___________________________________________

___________________________________________

2. 'பொடியாய்ப் போகாதோ' என்று கவிஞர் எதைக் கூறுகின்றார் ?

___________________________________________

___________________________________________

3. எமக்கு யார் துணையானால் நன்மைகள் எம்மைத் தேடிவரும்?

___________________________________________

___________________________________________

4. இப்பாடலில் வந்துள்ள பள்ளம் என்ற சொல்லின் எதிர்ச் சொல் யாது?

___________________________________________

___________________________________________

5. இப்பாடலைப் படிக்கும்போது உமது மனதில் தோன்றும் எண்ணம் யாது?

___________________________________________

___________________________________________

(புள்ளிகள் 10)

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுக்கு எடுத்துக் காட்டுகள் தருக.

   1. பெயரெச்சம் ____________________
   2. வினையெச்சம் ____________________
   3. வினைமுற்று ____________________

2. 'ஓடுகின்றான்' இந்த வினைமுற்றில் இடம்பெற்றுள்ள பகுதி, இடைநிலை, விகுதி என்பவற்றைத் தருக..

   பகுதி : ____________________

   இடைநிலை : ____________________

   விகுதி : ____________________

3. கூட்டுச் சொல்லியம் ஒன்றும் கலப்புச் சொல்லியம் ஒன்றும் தருக.

4. வேற்றுமை உருபுகள் எத்தனை? மூன்றாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை என்பவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

5. மாறுபடுபுணர்ச்சி எத்தனை வகைப்படும்? திரிதல் புணர்ச்சிக்கும், கெடுதல் புணர்ச்சிக்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

(புள்ளிகள் 15)

6. **பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.**

We use different means of transport to travel from one place to another. Our Feet, bicycle, car, bus, aeroplane and ship are the most used forms of transport. Walking by foot is a good exercise. It strengthens our body. It helps us to save money. Today the number of people using bicycles are increasing. Nowadays we see more bicycles on the roads than before.

Wij gebruiken veel verschillende middelen om van de ene plaats naar een andere plaats te gaan. Middelen als onze benen, fiets, auto, vliegtuig, bus, schip worden vaak gebruikt. Wandelen is een goede manier van lichaamsbeweging. Dit maakt ons lichaam sterk. En het helpt ook om geld te besparen. Tegenwoordig neemt het aantal fietsers toe. Nu (tegenwoordig) kunnen we meer fietsers op de weg zien dan voorheen.

For å ferdes fra et sted til et annet bruker vi forskjellige transportmidler. Vi reiser til fots, med sykkel, bil, fly, buss og skip dette er de mest brukte som transportmidlene. Det å gå til fots gir også trening. Dette gjør at vi blir sterkere. Ved å gå sparer vi også penger. Bruk av sykkel øker i dag. I dag ser vi flere sykler på veien.

Um von einem Ort zum nächsten zu gelangen benutzen wir verschiedene Verkehrsmitteln. Unsere Beine, Fahrrad, Auto, Flugzeug, Bus oder Schiffe werden hierzu häufig als Fortbewegungs-
möglichkeit benutzt. Laufen ist das Beste für den Körper. Er hält unseren Körper fit. Dazu spart es sehr viel an Geld. Die Zahl der Fahrradfahrer hat sich heutzutage gesteigert. Man sieht immer mehr Fahrräder auf den Straßen.

Vi burger forskellige former for transport til at bevæge os fra et sted til et andet sted. Vores ben, cykel, bil, flyvemaskine, bus, skib lignede transport bliver bruget mest. Går på ben er den bedste idræt / motion. Det gøre vores krop stræk. Oveni hjælper den også med spar penge. I dag vokser antallet af bruger af cykel. Nu kan man se flere cykler på vejen i forhold til før.

Noi per muoverci da un posto all'altro usiamo diversi mezzi di trasporto. Usiamo i nostri piedi,la bicicletta,la macchina,l'aereo,l'autobus e la nave come principali mezzi di trasporto.Camminare è un esercizio fisico che ci aiuta anche a mantenerci in forma. E ci aiuta anche a risparmiare soldi. Oggi il numero delle persone che usano la bicicletta sta aumentando. Infatti rispetto a prima adesso è possibile vedere molte piste ciclabili in giro.

Nous nous déplaçons d'un lieu à un autre à travers à travers différents moyens. Par exemple nous utilisons le vélo, nous marchons à pied, on se déplace en voiture,avion, bateau et ainsi de suite. Ce sont les moyens que nous empruntons souvent tout au long de notre vie. En effet, la marche à pied est un exercice efficace pour notre santé. De plus, ceci est une aide précieuse afin d'économiser au niveau de nos dépenses. A l'heure actuelle, on constate qu'il y a de plus en plus de cycliste. Des pistes cyclables sont tracées dans les rues afin de laisser les cyclistes rouler sur cette piste.

När vi är på en plats och vill ta oss till en annan plats så kan vi använda oss av flera olika fordon. Vi tar oss via fots, cykel, bil, flygplan, buss, båt är dem vanligaste fordonen. Att promenera är bra motion. Det stärker ens kropp. Man sparar även pengar. Idag ökar antalet cyklande. Nuförtiden kan man se fler cyklande på gatorna än förr.

(புள்ளிகள் 05)

**7) 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.**

- ★ 'தமிழுக்குத் தந்த கனி' என்ற பாடத்தினை உமது உரைநடையில் கதையாக எழுதுக.
- ★ உண்மை நட்பு
- ★ நீர் கண்டுகளித்த ஓர் இயற்கைக் காட்சி

(புள்ளிகள் 20)